

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்ற மாநில அளவிலான சிலம்பப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு, மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்எல்ஏ, கழக அயலக அணி தலைவர் கலாநிதி வீராசாமி எம் பி, ஆகியோர் கலந்து கொண்டு பரிசு கோப்பைகளையும் சான்றிதழ்களையும் வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகிகள் குறிஞ்சி எஸ். கணேசன், மாதவரம் டி. ராமகிருஷ்ணன், மிசா ப. மதிவாணன், வட்டச் செயலாளர்கள் கா. தாமரைச்செல்வன், வி .ஆர். குப்பன், கே. கருணாகரன், இ. கண்ணப்பன், பி .எஸ். சந்துரு மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் சன். முனியாண்டி, தமிழ் மணி , மஞ்சம்பாக்கம் ஆர். பாபு,பி .நிர்மல் குமார் ,நா.மோகன் குமார், பா. சந்திரன், வி. கார்த்திகேயன், கே. ஏழுமலை, பி. ஜெயராஜ், எஸ். உதயகுமார் ,பேன்சி ரமேஷ், எஸ். சிவகுமார் ,கே. சண்முக பிரியன், நாகராஜ், முல்லை ஆறுமுகம், காமராஜ், அமுதா மணிராஜ், கலைச்செல்வி ,ஆர் சுதா, எஸ். சுதா, சரவணன், ரகுவரன், துளசி, சங்கர், கோவர்தன், சையத் அப்சல் ,கதிரவன், சேரலாதன் உள்ளிட்ட பகுதி கழக வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்

## புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் கலைஞர் நூற்றாண்டு விழா!

# மாதவரத்தில் சிலம்பப் போட்டி - 700 க்கும் மேற்பட்ட மாநில அளவிலான வீரர்கள் பங்கேற்றனர்!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. – கலாநிதி வீராசாமி எம்.பி. பரிசுகளை வழங்கினர்!

சென்னை, செப். 12 - சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநில அளவிலான மாபெரும் சிலம்பப் போட்டி 10.9.2023 ஞாயிறு காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை, 19வது வட்டம் மாத்தூர் இரண்டாவது பிரதான சாலையில் உள்ள எவர்வின் பள்ளியில் நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடந்த இந்த சிலம்பப் போட்டிக்கு, வட்டச் செயலாளர்கள் கா. தாமரைச்செல்வன், இ. கண்ணப்பன். கே. கருணாகரன்,பி. எஸ். சந்துரு, வீ. ரா. குப்பன் ஆகியோர் வரவேற்றனர்.

தமிழ்நாடு முழுவதும் இருந்து மதுரை, திருச்சி, பாண்டிச்சேரி, செங்கல்பட்டு, திருவள்ளூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், சென்னை ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 700 க்கும் மேற்பட்ட சிலம்ப வீரர்கள் கலந்து கொண்டு ,தங்களது திறமைகளை வெளிப்படுத்தினார்கள். வின்னர்ஸ் சிலம்பம் அகாடமி சார்பில் அதன் மேலாண்மை இயக்குனர் யுவராஜ் தலைமையிலான குழுவினர் இந்த சிலம்பப் போட்டியை ஒருங்கிணைத்தனர்.

ஒன்றாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகள் முதற்கொண்டு, கல்லூரி படிக்கும் மாணவர்கள் வரை இந்த போட்டியில் கலந்து கொண்டார்கள். இந்த போட்டியின் துவக்கத்தில் மல்லர் கம்பத்தில் விளையாட்டு வீரர்கள் ஏ றி அசத்தி சாதனைகள் புரிந்தனர்

இந்த போட்டிகளை மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட செயலாளருமான மாதவரம் எஸ்.சுதர்சனம், மற்றும் அயலக அணி தலைவர்வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி ஆகியோர் துவக்கி வைத்து பரிசுகளை வழங்கினார்கள். வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு என பரிசு கோப்பைகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

முன்னதாக விளையாட்டு வீரர்கள் பேண்ட் வாத்தியம் முழங்க அணிவகுப்பு நடத்தி அதன் பின் விளையாட்டு வீரர்களுக்கு மதிய உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் திமுக சார்பில் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைதலைவர் குறிஞ்சி எஸ். கணேசன், மாவட்ட துணைச் செயலாளர் டி. ராமகிருஷ்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் மிசா மதிவாணன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சன் முனியாண்டி, துணை அமைப்பாளர் நாகராஜ், கலை இலக்கிய பகுத்தறிவு பாசறை அமைப்பாளர் தமிழ்மணி, முல்லை ஆறுமுகம், காமராஜ், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார், விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே .சண்முக பிரியன், பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். கோபாலகிருஷ்ணன், ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் கே. ஏழுமலை, மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் அமுதா மணிராஜ், எஸ் . கலைச்செல்வி, ஆர். சுதா, எஸ். சுதா, வர்த்தக அணி துணை அமைப்பாளர் பி .ஜெயராஜ், தொண்டரணி துணை அமைப்பாளர் பேன்சி ரமேஷ், பி. துரைசாமி, பகுதி கழக நிர்வாகிகள் பி. நிர்மல் குமார், நா. மோகன் குமார் நாகூர், வி. கார்த்திகேயன், பா. சந்திரன், 19வது வட்டக் கழக நிர்வாகிகள் சரவணன், திருமலை, ந.ரகுவரன், பா. துளசி, கே. சங்கர், கோவர்தன் வேகன்னியப்பராஜ் சையத் அப்சல், வி. ஹரி சுப்பிரமணி, ஏ. கதிரவன், 17 வது வட்ட நிர்வாகிகள் வி. மூர்த்தி, சி .பாலாஜி, ஜான்சன், வில்சன், பூபாலன், வடபெரும்பாக்கம் டாக்டர் மைக்கேல்,பி. செந்தில், எம். என். தளபதி மாதவரம் சதீஷ், வக்கீல் பி.கே. கண்ணன், சி. எம். ராஜா, டோமினிக், செமின் எடிசன், ஆர். விஜய் ஆனந்த், காவாங்கரை பீர்முகமது, டி.ஜே. நாதன், எலந்தனூர் சிவப்பிரகாஷ், சடையங்குப்பம் நைனியப்பன்,மாத்தூர் கே, விஜயகுமார் ,ராஜேஷ், கண்ணன், முஸ்தபா, சிவப்பிரகாசம், மதிவாணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

இறுதியில் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு நன்றி கூறினார்.





ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 167வது வட்ட தி.மு.க. சார்பில் வட்டச் செயலாளர் ஜெ.நடராஜன் தலைமையில் நங்கநல்லூரில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழா மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனைப் பிரசார பொதுக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துக்கொண்டு உரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் முனைவர் சபாபதி மோகன், மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், பகுதி செயலாளர் பி.குணாளன், எம்.எஸ்.கே.இப்ராகிம், கோல்டு டி.பிரகாஷ் உள்ளிட்டோர் உள்ளனர்.

## கடும் எதிர்ப்பையும் மீறி விஸ்வகர்மா யோஜனா திட்டம்

# பிரதமர் மோடி தொடங்கி வைப்பதற்குக் கண்டனம்!

### குலத் தொழிலை ஊக்குவிக்கும் என எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, செப். 12- கடும் எதிர்ப்பையும் மீறி குலத் தொழிலை ஊக்குவிக்கும் விஸ்வகர்மா யோஜனா திட்டத்தை பிரதமர் மோடி வரும் 17ஆம் தேதி தொடங்கி வைக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒன்பது ஆண்டுகளாக கடனுதவி வழங்காத ஒன்றிய அரசு தற்போது தேர்தலுக்காக இந்த திட்டத்தை அறிவித்துள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசு, விஸ்கர்மா யோஜனா என்ற ஒரு திட்டத்தை அறிவித்து, இதை செயல்படுத்தும் வகையில் 13 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியுள்ளது. பிரதமர் மோடியின் இந்த திட்டமானது குலத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளதாக எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இந்நிலையில், குலத் தொழிலை ஊக்குவிக்கும் வங்கி கடனுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படும் நிலையில், அதனை செயல்படுத்த ஒன்றிய அரசு தீவிரப்படுத்தியுள்ளது. அதன்படி, செப்.17 ஆம் தேதி பிரதமர் மோடி காணொலி காட்சி மூலம் இந்த திட்டத்தை தொடங்கி வைக்கிறார். நாடு முழுவதும் 70 இடங்களில் 70 ஒன்றிய அமைச்சர்கள் கலந்து கொண்டு அதனை தொடங்கி வைக்கிறார்கள்.

நகை தயாரிப்பு, தச்சு, சலவை, முடிதிருத்துதல், நெசவு உள்ளிட்ட தொழில்களில் ஈடுபடும் இளைஞர்களுக்கு வங்கிக் கடன் வழங்கும் விஸ்வகர்மா திட்டத்தை செயல்படுத்துவதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இந்த திட்டத்தின் மூலம் அனைத்து தொழில்களுக்கும் கடனுதவி வழங்க வேண்டும்.

குறிப்பிட்ட பிரிவினரை மீண்டும் அதே குலத் தொழிலுக்குள் தள்ளிவிடும் நிலைபாட்டை பா.ஜ.க. அரசு செய்யக் கூடாது என்று பல்வேறு அரசியல் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. ஒன்பது ஆண்டுகளாக கடனுதவி வழங்காத ஒன்றிய அரசு தற்போது தேர்தலுக்காக இந்த திட்டத்தை அறிவித்துள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

## ஜி 20 மாநாட்டிற்காக 300% கூடுதல் செலவு!

புதுடெல்லி, செப். 12–

ஜி 20 மாநாட்டிற்காக ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட தொகையைவிட 300 சதவீதம் கூடுதலாக செலவு செய்திருப்பது அம்பலமாகியுள்ளது.

20 நாடுகளை கொண்ட ஜி20 அமைப்பின் 18வது உச்சி மாநாடு டெல்லி பிரகதி மைதானத்தில் உள்ள பாரத் மண்டபத்தில் 2 நாட்கள் நடைபெற்றது. மாநாட்டின் நிறைவில், ஜி20 அமைப்பின் தலைமை பொறுப்பை பிரேசிலிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலையில், ஜி 20 மாநாட்டிற்காக ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட தொகையைவிட 300 சதவீதம் கூடுதலாக செலவு செய்திருப்பது அம்பலமாகியுள்ளது. ஜி 20 மாநாட்டிற்காக கடந்த ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் 990 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் மாநாட்டிற்கு 4 ஆயிரத்து 100 கோடி ரூபாய் அளவிற்கு செலவு செய்யப்பட்டுள்ளது.

நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட தொகையைவிட 300 சதவீதம் கூடுதலாக, அதாவது 3 ஆயிரத்து 110 கோடி ரூபாய் கூடுதலாக செலவு செய்யப்பட்டிருப்பது தற்போது தெரியவந்துள்ளது.

# ரூ. 4.36 கோடி மதிப்பீட்டில் திருத்தணி தொகுதியில் சாலை அமைக்கும் பணி!

### திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

திருவள்ளூர், செப்.12 திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு இடங்களில் புதிய சாலை அமைக்க பணிகள் துவக்க விழா நடைபெற்றது. இதில் பள்ளிப்பட்டு மேலப்பூடி கிராமத்தில் ரூ.72 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை இராகிபேட்டை ஒன்றியம் தியாகாபுரம் முதல் பாலாபுரம் வரை ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் மற்றும் ஸ்ரீ காளிகாபுரம் முதல் அமுதா ரெட்டிகண்டிகை வரை ரூ.2.48 கோடி மதிப்பீட்டில் என மொத்தம் ரூ. 4 கோடியே 36 லட்சத்தில் புதிய தார் சாலை அமைக்கும் பணியை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ துவங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி பார்வையிட்டார்.

அப்போது பொதுமக்களிடம் தங்களது கோரிக்கைகளை கேட்டு அறிந்தார் தமிழ்நாட்டு முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் பொதுமக்களுக்கு செய்த சாதனைகளை மற்றும் பல்வேறு திட்டங்களை எடுத்துக் கூறி வருகின்ற 2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தல் குறித்து இந்தியா கூட்டணிக்காக பிரச்சாரம் மேற்கொண்டார்.

அருகில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் சி.என்.சண்முகம், சி.ஜெ.சீனிவாசன், பி.டி.சந்திரன், முன்னாள் ஒன்றிய செயலாளர் ரவீந்திரநாத், ஆர்.கே.பேட்டை ஒன்றிய குழு தலைவர் ரஞ்சிதா ஆபாவாணன், ஒன்றிய குழு துணைத் தலைவர்கள் பொன் சு.பாரதி, திலகவதி ரமேஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முரளி சேனா, உள்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## 30 - ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

12.09.2023



# க.வீரைய்யா Ex,MP.

தந்தை பெரியாரிடம் பயின்று
அண்ணாவின் லட்சிய தீபத்தை தாங்கி பிடித்து
கலைஞரோடு ஒன்றாக பயணித்து
தளபதியின் உழைப்புக்கு உயர்வு தந்து
கழக வழியில் தடம் பிறழாமல்
எங்களுக்கு வழிகாட்டிய கலங்கரை விளக்கே
காலமெல்லாம் உங்கள் நெறியில்....

**தலைவர் தளபதியின்**
தலைமையில்
என்றைக்கும் இயக்கம் காப்போம் உங்கள் வழியில்...


**மு.க.இராமகிருஷ்ணன்**
ஒன்றிய கழகச் செயலாளர்.மாவட்ட கவுன்சிலர்

**Dr.மு.க.முத்துக்கருப்பன்** M.B.B.S., DMRD., MDRD.,
மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர்

**க.வீரைய்யா Ex,MP. குடும்பத்தினர்கள்**
புதுக்கோட்டை

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எஸ். ஸ்ரீதர்**
**செப்டம்பர் 12 (2020)**



தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

நாகப்பட்டினம் நகரத்தில் வட்ட பிரதிநிதியாகவும், நகர இளைஞர் அணி அமைப்பாளராகவும், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

நாகப்பட்டினம் நகர் மன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.